திருமறைக்கலாமன்றத்தின்

# முற்றம்

செய்தி இதழ்

ஆண்டு - 05 இதழ் - 01

எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன்



நவஜோதி ஜோகரட்ணம்

## நூல் அறிமுகம்

திருமதி. நவஜோதி யோகரட்ணம் அவர்களின் எனக்கு மட்டும் உதிக்கும் சூரியன் என்னும் கவிதைநூல் எதிர்வரும் 19.2.2006 அன்று பாரிசில் அறிமுகம் செய்து வைக்கப்படுகிறது.



## ஓராண்டுத்துயர்

அலைகள் மட்டும்தான் ஓய்ந்தன துயரங்களல்ல...



எங்கள் கலைஞர் றொபேர்ட் அண்ணன் எம்மை விட்டுப் பிரிந்த அதிர்ச்சியிலிருந்து நாம் இன்னும் மீளவில்லை. வாழ்வு மிக வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கிறது. சுழன்று கொண்டிருக்கிறது என்பதை விட வேகமாக எங்களை சுழற்றி எறிந்துகொண்டிருக்கிறது என்பதே உண்மை.

இலங்கையில் பண்டத்தரிப்பை பிறப்பிடமாகக்கொண்ட கலைஞர் றொபேர்ட் அவர்கள் சிறுவயதிலிருந்தே கலைஞானம் மிக்கவர். எழுபதுகளின் ஆரம்பங்களில் விளான், இளவாலை போன்ற கிராமங்களில் எழுந்த நாடக எழுச்சியோடு எழுந்து நடந்தவர். ஆர்மோனியக்கருவியின் பலம் உணர்ந்தவர். தனது ஆர்மோனியக்கருவி மூலமாக நாடகங்களுக்கு பின்னணி இசை வழங்கியவர்.

தொடர்ச்சி 16ம் பக்கத்தில்...



ஓவியர் வாசுகன் ஐரோப்பிய கலாச்சார மையங்களின் ஆதரவுடன் பாரிஸில் கண்காட்சிகள் நடாத்தி வருகிறார்.



மகாஜனா பழையமாணவர் சங்கம் நடாத்திய கலந்துரையாடல்



பொங்கல் விழாவில்..

## அகதியாக ஆசைப்பட்டு....

நாங்கள் முதலில் பயந்தது உண்மைதான். ஆனால் எங்களுக்கும் கோபம் வந்தது. அது தலைக்கேறியது. எங்களில் இரண்டுபேர் துணிந்தார்கள். பின் எல்லோரும் துணிந்தோம். கப்பலை உடன எடு என்று கத்தி ஆர்ப்பாட்டம் செய்தோம். மேற்தளத்தில் நின்றுகொண்டிருந்த கப்டன், ஏஜென்சி அரபிக்காரன் எல்லோரும் மூட்டை முடிச்சுகளுடன் பக்கத்தில் நின்ற வள்ளத்திற்கு தாவினார்கள். நாங்கள் வெளிக்கிற்றம் நீங்கள் என்னடா செய்வியள் பாப்பம். எங்களை விட்டிட்டு உங்களால என்னசெய்யமுடியும் என்ற கர்வத்தில் எங்களை நடுக்கடலில் தவிக்கவிட்டு அவர்கள் கிளம்பினார்கள்.

தொடர் 15ம் பக்கத்தில்...

திருமறைக்கலாமன்றத்தின்

முற்றம்

*Thirumaraikalamanraththin Muttam*



ஆண்டு : 5
இதழ் : 1

மாசி - 2006

இதழ் குழு :

சந்திரமோகன்
பெஞ்சமின் இமானுவல்
ம. அன்ரன்

*Thirumaraikalamanraththin Muttam*

தொடர்பு முகவரி :
A.V. Damian
(Esc- 6)
8, Bld Raymond Poincare
94170 Le PERREUX
FRANCE

அன்பளிப்பு : அரை Euro

# யார் மீது குற்றம் ?

ஆழிப்பேரலையின் ஊழித்தாண்டவம்
அள்ளிச்சென்றது ஆயிரமாயிரம்
கோடி கொடுத்தும் தீராத கொடுந்துயர்

கடலில் தான் குற்றம் என்கிறார்கள் - இல்லை
கடல் கீழ் கற்பாறையில் தான் பிழை என்கிறார்கள்
இயற்கையில் தான் குற்றம் - இல்லை இல்லை
இந்தேனேசியாவில் தான் பிழை
யார் மீது குற்றம் கூறி என்ன
மாண்டவை மாண்டவைதான்.

செவ்வாயில் செந்நீரூற்று தேடும் மனிதம்
நிலாவிலே நியூட்டனின் விதியை பரிசோதிக்கும் மனிதம்
எம் காலடியில் வந்து வீழ்ந்த அழிவை
அறியமுடியாத அவலம்.
வெட்கித் தலைகுனிவோம்!

பதுங்கித்தாக்கும் பேரலை என்றார்கள்
பல ஆண்டுகளுக்கு முன்பும் வந்த தென்றார்கள்
சுனாமி என்று பெயரும் வைத்தார்கள்



கடல் பின்வாங்கியதால்
கடல்கோள் எனப் பொருள்படும்.

ஆளுக்கொரு அறிக்கைகள்
விளக்கங்கள், வியாக்கியானங்கள்

கவிதைகள் எழுதினோம்
கட்டுரைகள் எழுதினோம்
இசைப்பாடல்கள் இயற்றினோம்
இலக்கியமும் படைத்தோம்
சர்வமும் சுனாமியாய்...

ஆண்டொன்று கழிந்தது.
அஞ்சலிக்கின்றோம்.

வீழ்ந்தவை வீழ்ந்தவைதான்
மரங்கள் மட்டும் உயிர்க்கலாம்

மீண்டும் காத்திருப்போம்
இன்னொரு பேரலைக்காய்
பெயரோடு தயாராக...



- இரா. ஜெயக்குமார்



# வாசுகனின் ஓவியங்கள்

நான் சிறுவனாக இருந்த காலத்தில் ஒரு நாள் என்னுடைய அப்பா பூக்கள் வரைவதற்கு கற்றுத்தந்தார். அதுவரை ஆறு வட்டங்களைக்கொண்டு மல்லிகைப்பூ வரையும் வித்தை மட்டுமே எனக்குத் தெரியும். இலகுவாக மல்லிகைப்பூ வரைவதைத் தவிர்த்து சற்று மாறுபட்ட பூக்களை வரைவது எப்படி? பறவைகள் இருக்கும் போது வரைவது எப்படி என்று கீறிக்காட்டி விளக்கியதோடு ஓவியங்கள் வரைவதற்கான பயிற்சிப்புத்தகங்களையும் வாங்கித்தந்தார். அப்பாவின் இந்த உற்சாகப்படுத்தலே ஓவியத்துறையில் நான் ஈடுபாடு கொள்வதற்கு அடிப்படைக்காரணங்களாக அமைந்தன.

மகாஜனக்கல்லூரியின் சித்திர ஆசிரியரான திரு. தியாகராஜா மாஸ்ரர், கொழும்பு இந்துக்கல்லூரி ஆசிரியர்களான திரு. தயாபரன் மாஸ்ரர், ஆசிரியை திருமதி. லலிதா நடராஜா ஆகியோர் என்னை ஊக்கப்படுத்தியதோடு பாடசாலைகளில் நடைபெறும் ஓவியப்போட்டிகளிலும், கண்காட்சிகளிலும் என்னை பங்குபெறச்செய்தனர்.

மேலும், என் தேடலுக்குள்ளான எனது கிராமமான அளவெட்டியிலுள்ள தோட்டங்களும், வயல்களும், மிருகங்களும், எனக்கு அண்மைய கீரிமலை கடற்கரைக் காட்சிகளும் இன்னும் இயற்கை எழில் கொண்ட இலங்கைத்தீவின் வெவ்வேறு பகுதியிலுள்ள மாறுபட்ட தன்மைகொண்ட பச்சை நிறங்களும், உதாரணமாக நுவரேலியாவிற்கு அண்மையிலுள்ள உலக முடிவு (worlds end - இந்த பயங்கரமான செங்குத்தான மலை உலகில் நாலு நாடுகளிலேயே உள்ளது) என்ற ஆழமான பள்ளத்தாக்கு போன்ற இயற்கையின் அழகும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வெவ்வேறு தன்மையுடைய இயற்கையின் நிறங்களும் என்னை வியப்பில் ஆழ்த்தின.

தொடர்ந்து மேற்படிப்பிற்காக நான் சென்ற சைப்பிரஸ் தீவும் கடல்காட்சிகளும், ஒலிவ்தோட்டங்களும், பனிமலைகளும், பல புதுவிதமான பறவைகளும் எனது







படைப்புலக அனுபவத்தை விரியச்செய்தன.
சைப்பிரஸில் எனது ஆசிரியர் திரு. கிளின் கியூஸ் (Glyn Hughes) அவர்களுடன் பணியாற்றிய காலங்கள் மகத்தானவை. நல்ல நண்பராக, நல்ல ஆசிரியராக, நல்ல முதலாளியாக தனது ஓவிய அனுபங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

எனது முதலாவது ஓவியக்கண்காட்சி 14.11.1999 ல் Melina Mercouri Hall ல் நடைபெற்றது. பலதரப்பானவர்களிடமிருந்தும் கிடைந்த பாராட்டுக்களினால் நான் பெரிதும் உற்சாகமடைந்தேன்.

எனது ஓவியங்களில், வர்ணங்கள் கோடுகளோடு நின்றுவிடாது, சூழலில் கிடைக்கக்கூடிய, மற்றும் பயணங்களில் சேகரிக்கப்பட்ட பொருட்கள், இறந்த வண்ணத்துப்பூச்சிகள் என சூழலையே நினைவுபடுத்த விரும்புகிறேன். இதனால் கன்வஸ், சட்டம் என ஒரு எல்லைக்குள் நின்று விடாது வெளியே செல்ல முயற்சிக்கிறேன். பல மொழி எழுத்துக்களை என் படைப்புக்களில் பயன்படுத்துகிறேன். பிரெஞ், ஆங்கிலம், கிறீக், சிங்களம், தமிழ் என்பவையே அவை.

ஓவியங்களுக்கு அவ்வப்போது நான் தலைப்பிட்டும் மகிழ்கிறேன். அவற்றுள் சில.
உலக முடிவு, 26.11.2004., அப்சராஸ், சவுக்கு, கடல்புறாவும் கடல் கன்னியும், சுதந்திரத்திற்காக காத்திருத்தல், முகமும் இல்லை பெயரும் இல்லை, மண்ணும் மரங்களும், மயிலுடன் நடனம், குன்று, இசைக்கருவி, பிரான்ஸின் உணர்வுகள். 48வது உயரமான அருவி, வசுல்லா....

இப்போது நான் பிரான்ஸில் இருப்பதையிட்டு மகிழ்வடைகிறேன். பிரான்ஸ் மண்ணின் மகிமை படைப்பாளிகளை அழியவிட்டதில்லை. முதலாம் இரண்டாம் உலகப்போரில் வீழ்த்தப்பட்டபோதும் படைப்பாளிகள் வாழ்ந்ததாகவே சரித்திரம் கூறுகிறது. நவீன படைப்புக்களையும் பயித்தியக்காரத்தனமான படைப்புக்களையும் உள்நோக்கிப் பார்ப்பதில் பிரான்ஸ் பின்நோக்கியதல்ல - முட்களுக்கு முத்தம் கொடுப்பது போலவே.
- வாசுகன்.





பாரிஸில் வசித்துவரும் வாசுகன் பிரெஞ்சு கலாச்சார மையங்களின் ஆதரவுடன் பாரிஸில் ஓவியக் கண்காட்சிகள் நடாத்திவருகிறார். அவரைப்பற்றிய அறிமுகத்திற்காக அவரை அணுகியபோது கிடைத்த தகவல்களே இவை. மேலதிக விபரங்கள், தொடர்புகளுக்கு : http://vpvasuhan.tripod.com



# பிரான்ஸில் பழையமாணவர் சங்கங்களின் எதிர்காலம்...



பிரான்ஸில் பழையமாணவர் சங்கங்களின் எதிர்காலம் என்னும் தலைப்பில் 29.01.2006 இல் கலந்தரையாடல் ஒன்றினை பாரிஸில் இயங்கும் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் ஒழுங்கு செய்திருந்தது.

1. கலாச்சாரம் என்றால் என்ன?
2. புலம்பெயர்நாடுகளில் எங்களின் எதிர்காலம்? 3. புலம்பெயர்நாடுளில் பெற்றோர் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், போன்ற தலைப்புக்களிலான கலந்துரையாடல்களையும் மகாஜனா ப.மா.ச. ஏற்கனவே பாரிஸில் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை பாரிஸில் இயங்கும் ஏனையபழைய மாணவர் சங்கங்களையும் அழைத்து அவர்களது அனுபவங்களையும், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், சங்கங்களின் எதிர்காலம் பற்றியும் கலந்துரையடினர்.

பழையமாணவர் சங்கங்கங்களில் ஆரம்பத்தில் இருந்த உற்சாகம் தற்போது இல்லை, அங்கத்தவர் உதிர்வு என பலரும் சலித்துக்கொண்டபோதும் கலந்துரையாடலில் வியக்கத்தக்க பல தகவல்கள் மிதந்தன.

பாடசாலைத் தேவைகளுக்கென பெருந்தொகையான பணத்தினை ஒவ்வோரு சங்கங்களும் சங்க உறுப்பினர்களும் வாரி வழங்கியிருக்கிறார்கள். பாடசாலைகளில் வறுமைக்கோட்டின் கீழ்அவதியுறும் மாணவர்களுக்கான உதவிகளுக்கு ஊக்கம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்க உதவியற்ற ஆசிரியர்களுக்கு தொடர்ந்து உதவிவருகிறார்கள். இவர்களது உதவிமூலம் பல ஆசிரியர்கள் அரசாங்கத்தினால் நிரந்தர நியமனம்பெற வழிவகுத்திருக்கிறார்கள். நூலக அபிவிருத்திபற்றி சிந்திக்கிறார்கள் உதவுகிறார்கள்.. இதைவிட புலம்பெயர் நாடுகளில் கலை இலக்கியத்துறையில் இச்சங்கங்கள் உத்வேகமான பங்களிப்பினை நல்கி வருகின்றன. இவையெல்லாம் வெறும் பேச்சளவிலல்ல. செயற்படுத்தியும் வந்திருக்கிறார்கள்...



எல்லாவற்றையும் விட இச்சங்கங்களை மையம் கொண்டு இயங்குபவர்கள் பலவேறு சமூகம்சார்ந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள். நிர்வாகரீதியாக பலவிடயங்களை கற்றுக்கொள்கிறார்கள். ஒரு பாடசாலையின் பழையமாணவர்கள் என்ற நூலிழையைப் பற்றிக்கொண்டு ஐக்கியமாகிறார்கள். அந்தி ஐக்கியத்தினூடு ஓசைப்படாமலே சமூகத்திற்கு ஆரோக்கியமான உந்துதலைக்கொண்டுகிறார்கள்.

தாங்கள் செய்கின்ற பணிகள் ஏதாவது எதிர்வினையை ஆற்றுகின்றதா பல தடவை யோசிக்கிறார்கள். எதிர்வினை ஏற்படக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்கள்..
இவ்வாறான சங்கங்களுக்கு ஏற்படக்கூடிய சோர்வு விரும்பக்கூடியதல்ல. அவர்களை உற்சாகப்படுத்தி இயங்கச்செய்தல் சமுதாயத்தை நேசிப்பவர்களது கடமை.

மகாஜனா பழையமாணவர் சங்கத்தின் இந்த கலந்துரையாடல் முயற்சி பாராட்டத்தக்கது. கலந்துகொண்டவர்கள் மனம்விட்டுக்கருத்துக்களை பரிமாறினர். ஒவ்வோருவரும் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொண்ட முறையும் மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் உயர்வெண்ணமும் சிந்தனையும் நம்பிக்கையை துளிர்க்கச்செய்தன. இக்கலந்துரையாடலில் சென் கென்றிஸ் ப.மா.சங்கம், இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடம் ப.மா.ச. , சென்ஜேம்ஸ் ப.மா.ச., வேலணை மத்திய ம.வி.ப.மா.ம மகாஜன ப.மா.ச ஆகியன கலந்து கொண்டன. தாங்கள் தாங்கள் சார்ந்த பாடசாலைகளைவிட உள்ளூர் சிறிய சிறிய பாடசாலைகளுக்கு உதவவேண்டும் என்ற கருத்து கலந்துரையாடலில் பங்குகொண்ட பலரது விருப்பமாகவும் இருந்தமை அவர்களது விசாலித்த மனத்தையும் பார்வையையும் வெளிக்காட்டியது.

\- ஆர். சந்திரன்



# வேர்களும் முகங்களும்

- அ.வ.டேமியன் சூரி.

**யாழ்** மாநகர சபையில் ஒரு அழகான கலாச்சார மண்டபம் இருந்தது. அந்த மண்டபத்தில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் வாழும் கலைஞர்கள் நாடக அரங்கேற்றங்கள் செய்து மகிழ்ந்தனர். எமது ஊரைச் சேர்ந்த கலைஞர்களாலும் *'இடிந்த கோவில்'* என்ற நாடகம் மேடையேற்றப்பட்டது. திருமறைக் கலாமன்றத்தின் நாடகங்களும் அங்கு மேடையேற்றம் கண்டுள்ளன. சகல வசதிகளும் கொண்ட அந்த மண்டபம் இலாபகரமாக இயங்காத காரணத்தால் அதனை படமாளிகைக்கு குத்தகைக்கு விட மாநகரசபை முடிவெடுத்தது. அதன்பின் அம்மண்டபம் றியோ படமாளிகையானது.

75எம்.எம் அளவுடைய அகண்ட திரையுடைய அந்தப் படமாளிகையில் முதல் முதல் திரையிடப்பட்ட படம் சாள்ரன் கெஸ்ரனில் *காட்டும்.*
சாள்ரன் கெஸ்ரன் என்றால் மிகுந்த வரவேற்பு யாழ் ரசிகர்கள் மத்தியில் இருந்தது. அவரது வெற்றிப்படங்களான 'ரென் கொமாண்மன்ட்' , 'பென்கர்' ஆகியவை உலகப் பிரசித்தி பெற்றவை. அதே எதிர்பார்ப்பு காட்டும் படத்திற்கும் இருந்தது. அதுவும் அகண்ட திரையில் பார்ப்பதென்றால் கனவைச் சொல்லவும் வேண்டுமா?

அந்த ஞாயிற்றுக்கிழமை நண்பர்கள் அனைவரும் கூடி விவாதித்துக் கொண்டிருந்தோம். எதற்கு போவது? 'காட்டும்' படத்திற்கா? அல்லது மூன்று நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் கலைக்கதிர் நாடகமன்றத்தின் நாடகப் போட்டிக்கா? அன்று தான் நாடகப் போட்டியின் இறுதி முடிவுகள் அறிவிக்கும் நாள். எமது இளைஞர் கலைக்கழகத்தின் 'கண்ணீர்' நாடகம் அப்போட்டியின் முதல் நாள் அமர்வில் மேடையேற்றப்பட்டதால் கலையார்வன் இராயப்பு போன்றவர்களுக்கு நாடகப் போட்டிக்கு செல்ல வேண்டு மென்ற ஆவல்.
எனக்கோ நான் அந்நாடகத்தில் நடித்திருந்தாலும் அந்தப்பக்கம் போவதற்கு விருப்பமில்லை. என்மனம் மிகவும் சஞ்சலத்தோடும் கவலையோடும் இருந்தது. அதற்கு காரணமும் இருந்தது.
எப்படியும் இவர்களை நாடகப்போட்டிக்கு செல்லவிடாது அந்தநேரத்தை அகண்ட திரையில் படம் பார்க்க அழைத்துச் செல்ல வேண்டும் என்று என் மனம் வேகமாகத் தூண்டியது. அதற்கான காரணங்களை அடுக்கிக் கொண்டே போனேன். விடாப்பிடியாக நின்று வெற்றியும் கண்டேன்.

றியோ படமாளிகையில் சாள்ரன் கெஸ்ரனின் 'காட்டும்' படம் 3.30 மணிநேரப்படம். பிரமாண்டமான விளம்பரங்கள் அதற்காக செய்யப்பட்ட பொழுதிலும் படம் நாம் எதிர்பார்த்த அளவு மனதை தொடவில்லை. ஒருநல்ல கதை உள்ள அரசபடமாக, நிறைய சண்டைகள் நிறைந்ததாக இருக்கவேண்டும். இதுவே அக்காலத்தில் எமது எதிர்பார்ப்பும் இரசனையும் கூட. படத்தில் முழுமையான கவனம் செல்லவில்லை ஆகையால் என் சிந்தனை யாவும் வெள்ளிக்கிழமை நடைபெற்ற எங்கள் நாடகத்தின் பால் திசை திரும்பியது.

நான் சப்பாணி வேடத்தில் நடித்திருந்தேன். களவு செய்த ஒருவனை பொலிஸ்காரன் துரத்திக்கொண்டு வருகின்றான். சப்பாணி வீதியின் ஓரம் வெற்றிலை வியாபாரம் செய்து கொண்டிருக்கின்றான். கள்வன் சப்பாணியின் கடையோரம் மறைகிறான். பொலிஸ் சப்பாணியை கள்வனாக தவறுதலாக எண்ணி தான் வைத்திருந்த பொல்லால் அடிக்கிறான். படு மோசமாக தாக்கப்பட்ட பின்னர் தான் அடிப்பது நடக்கமுடியாத சப்பாணிக்கென பொலிஸ் காரன் உணர்ந்து கொள்வான். அந்த நாடகத்தின் அக்காட்சி என்மனக்கண் முன் வந்து போகப் போக என்மனம் கலங்கி ஏதோ ஒன்றை இழந்தது போல் தவிக்கிறது. இன்னுமொரு காட்சி, சப்பாணியின் நண்பன் அவனது நலம் விசாரிக்க வருகிறான். தனது வாழ்க்கைச் சுமைகளையும், தனது வயதான தங்கையையும் எண்ணி நண்பனிடம் புலம்புகின்றான். அவளது எதிர்கால வாழ்க்கைக்கான வழி, அவளை கரைசேர்க்க அவனுக்கு வேண்டிய பணம் , அவளது கணவன்பற்றிய அவனது கனா, இவை பற்றியெல்லாம் நண்பனோடு அலசி ஆராயும் காட்சி. இக்காட்சியும் இடைக்கிடை மனதில் தோன்றி மறைகிறது. நாடக மேடையேற்றத்தின் போது மனதை பாதித்து அழுத்தும் இவ்விரு காட்சிகளும் இரண்டு நாட்களாக எனது தூக்கத்தைக் கெடுத்து நான் விரும்பாத ஒரு வித பதட்டத்தை என்னுள் உருவாக்கி துரத்திக்கொண்டிருந்தது. இந்த நாடகத்திற்காக 14 நாட்கள் அதுவும் ஒரு நாளுக்கு மூன்று முறை ஒத்திகை. காலையில் எழுந்தவுடன் கலையார்வனால் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட 40 ஒற்றைகள் உள்ள முழு வசனங்களையும் தவறாது மனனம் செய்தல். போகும்போது, வரும்போது கண்ணாடிக்கு முன்னால் மலசல கூடத்தில் இதை எப்படி பேசலாம் எப்படி நடிக்கலாம் என்ற எண்ணமும் சிந்தனையும். இடைவிடா உழைப்பு அனைத்தும் வீணாகிப்போய்விட்டதே என்ற ஏக்கம்.
இந்த உளைச்சல் தான் 'காட்டும்' படம் பார்க்க விடாப்பிடியாக கட்டாயப்படுத்தி என்நண்பர்களை அழைத்து வரத் தூண்டியது. பொலிஸ் காரனுக்கு நடித்தவன் என்னை அடிக்கும் கட்டத்தில் என்னை அடிக்காது திரைமறைவில் நின்று கொப்பி பார்க்கும் என் நண்பனை பார்த்துச் சிரித்ததான்.
நானோ பொலிஸ்காரன் அடித்தது போலவும், வசனத்தை கோட்டை விட்ட நண்பன் அதை பேசியமாதிரியும் நான் பாவனைசெய்து நடித்தும் அந்நாடகத்தை ஒப்பேற்றினேன். இருப்பினும் மனம் ஆறவில்லை. இதுபோல பல.

அவன் ஏன் சிரித்தான்? அவனெல்லாம் ஏன் நடிக்க வரவேண்டும்? என்முன் கேள்விகளும் கவலைகளும் எழும்போதெல்லாம் நடித்த நண்பர்கள் மேலெல்லாம் கோபம் கோபமாக வந்து போனது. இந்த லட்சணத்தில் பரிசு கிடைக்க வாய்ப்பே இல்லாத அப் போட்டியின் முடிவை அறிய எப்படி என் மனம் இடம் கொடுக்கும். அதை தவிர்ப்பதற்காகவே சண்டைபிடித்து அனைவரையும் படம் பார்க்க அழைத்துச் சென்றேன்.

படம் முடிந்தது. இரவு 10மணி. அனைவரும் போட்டி நடந்த மண்டப வழியோரமாக நடந்து வருகின்றோம். அவ்வேளை கலைக்கதிர் நாடகமன்றச் செயலாளர் அங்கு துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவர் எங்களை அணுகி எங்கே போய்விட்டு வருகிறீர்கள் என்றார். மனம் திக்குதிக்கென்றது. கண்களை மூடி அவரை பார்ப்பதை தவிர்க்க எண்ணினேன். அதற்குள் ஒலித்தது சிறந்த நாடகமாக இராசுவின் 'நீரூற்று' நாடகம் தெரிவாகியுள்ளது. எதிர்பார்த்தது தானே நடந்துள்ளது. முகத்தை வெட்கம் நிறைந்த கவலையோடு மறுபக்கம் திருப்பிக்கொண்டேன். சிறந்த நடிகனாக டேமியன் சூரி 'கண்ணீர்' நாடகத்தில் சப்பாணி வேடத்தில் நடித்தமைக்காக தெரிவாகியுள்ளார் எனக்கூறி என்னை கட்டி அணைத்து வாழத்தினார். என்னால் நம்பவே முடியவில்லை.

*தொடரும்...*




## 1.

## நவீன தமிழ் இலக்கியத்தின் மையப் புள்ளி

சுந்தர ராமசாமியின் உடல் நிலை பற்றிய உடனுக்குடனான தகவல்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொண்டிருந்தாலும் அவர் தேறி விடுவார் என்ற என் நம்பிக்கை பொய்யாகிப் போனாலும் தொலைபேசியில் அழைத்தால் *நல்லா இருக்கிறேன். சிறிது* தூரம் நடந்துவிட்டு வந்தேன். என்ற ஆரம்பத் தகவல் பரிமாற்றங்களுடன் எங்கள் குடும்ப இலக்கிய உரையாடல்கள் தொடரும் என்பதான பிரமை என்னுள் தங்கியிருந்தது. ஆனால் இணையத் தளங்கள், பத்திரிகைகள், தமிழகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற சிறுபத்திரிகைகள் ஆகியவற்றில் வெளி வந்தவைகளை வாசித்த போதுதான் மனம் அதை உறுதிப்படுத்திக்கொண்டது.

ந.பிச்சமூர்த்தி, கிருஸ்ணன்நம்பி ஆகியவர்களின் மறைவு முக்கியத்துவமற்றுப் போனதையிட்டு மனம் நொந்தவர் சு.ரா. இன்று சு.ரா. வின் மறைவை ஒட்டிய செய்திகள் முக்கியத்துவம் தமிழக சூழலின் மாற்றத்தை சுட்டுகிறதா? அல்லது சூழலை மாற்றும் அளவிற்கு தன் இருப்பை நிலைநிறுத்திய அவர் ஆளுமையைச் சுட்டுகிறதா?

சு.ரா. தான் எழுதத்தொடங்கிய காலத்தில் தனக்கு முன்னே தம்மை நிலைநிறுத்திய நவீன இலக்கிய ஆளுமைகளுடன், அவர் படைப்புக்களுடனும், அவர்களுடனும் நேரடியாகக் கொண்டிருந்த தொடர்பு தன் சமகாலத்தவர்களுடனும் தனக்கு பின்னே வந்த படைப்பாளிகளையும் தாண்டி இன்று புதிதாய் படைப்போரிடமும் அத் தொடர்பின் நீட்சியைப் பேணிக்கொண்டதின் மூலம் தலைமுறை இடைவெளிகள் கடந்த ஒருவராகவே தம்மை நிறுவியுள்ளார். அதன் மறுபக்கமாய் தன் படைப்பு ஆளுமை மூலம் அன்றைய *பட்டியல்களில்* நிரந்தர இருப்பைத் தனதாக்கிக் கொண்ட சு.ராவுடன் தலைமுறை தலைமுறையாய் வரும் படைப்பாளிகள் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள விரும்புவர்களாகவே காணப்பட்டுள்ளனர். எனவே வாழும் காலம்வரை நவீன தமிழ் இலக்கிய போக்கின் மையப்புள்ளியாகவும் சூழ வாழ்ந்த படைப்பாளிகளின் கருத்துலகைப் பாதுகாப்பவராகவுமே இருந்துள்ளார். ஒருவகையில் *ஒரு புளிய மரத்தின் கதை* நாவலில் வரும் புளிய மரம்போல் வந்து போகும் சகல மாற்றங்களையும் அவதானித்தபடியிருக்கும் ஒரு முக்கிய சக்தியாகவும் இருந்திருக்கிறார்.

மார்க்சிய கோட்பாட்டில் தீவிர நாட்டம் கொண்டிருந்த காலத்தில் எழுதப்பட்டவைகளை உடல் சார்ந்த பார்வைகள் எனக் கொண்டால் மார்க்சியத்தின் நடமுறைகள் சார்ந்து அவருள் ஏற்பட்ட அதிருப்திகளின் பின் வெளியானவைகளை மனம் சார்ந்த பார்வைகள் எனக்கொள்ளலாம். மனித மனங்களின் இருண்ட மடிப்புகளிடையே உறைந்திருந்து எதிர்பாராத சமயங்களின் எதிபாராத அர்த்தங்களுடன் தோன்றும் அதன் விநோதங்கள் எப்போதும் அவருக்கு வியப்பை அளித்துக்கொண்டே இருந்தன.

சரஸ்வதியில் வெளிவந்த முதல் சிறுகதையான *முதலும் முடிவும்* மில் இருந்து கனடாவில் வெளிவரும் *காலம்* இதழில் வெளிவந்த *ஜகதி* சிறுகதை வரை இந்த நீண்ட கால இலக்கியச் செயற்பாட்டின் மூலம் ஒரு பிரமாண்டமான சக்தியாக தன்னைத் தகவமைத்துக் கொண்டுள்ளார்.

தன் காலத்திற்குப் பின் தமிழில் படைப்புச் சிகரங்களைச் சென்றடைய முனையும் ஒரு படைப்பாளி இறுதியாகச் சு.ரா. வையே எதிர் கொள்ள வேண்டியுள்ளது. சிகரங்களை அடையும் வழியைச் சு.ரா. வே அடைத்துக்கொண்டு நிற்கிறார். தமது படைப்புக்கள் மூலம் சு.ரா. வைத் தாண்டிச் செல்வதே இயல்பான வழியாக இருக்க அதை விமர்சனம் என்ற போர்வையில் வன்மம் கொண்ட சிற்றுளியால் உடைத்து சிறு இடைவெளியை ஏற்படுத்தி அதற்குள்ளால் நுழைந்துவிடும் ஆவலில் சிலர் ஈடுபட்டுள்ளனர். நான் சிறந்த படைப்பாளி எனச் சொல்லிக் கொள்வதற்கும் நான் சுந்தர ராமசாமியை விடச் சிறந்த படைப்பாளி எனச் சொல்லிக் கொள்வதால் சுட்டப்படும் சு.ரா. என்ற பெயரே அதிக பட்ச உச்சத்தின் குறியீடாகவல்லவா இருக்கிறது.

என்னுடைய முதன்மையான கவனமும் ஆர்வமும் இலக்கியத்தைச் சுற்றியிருந்தாலும் என் நோக்கம் படைப்புக்கள் வழியாக தமிழ்ச் சூழலில் சிந்தனை சார்ந்த ஒரு விழிப்பை உருவாக்குவதில் முக்கியமான பங்கை ஆற்றவேண்டும் என்பதே எனக் கூறிய சு.ரா. தமிழக பத்திரிகைகள் உருவாக்கிய வெகுசன இலக்கியம் பற்றியும், தகுதியற்றவர்கள் பரிசுக்கு தேர்ந்து கொள்ளும் முறைபற்றி ஆழ்ந்த கவலையும் வெறுப்பும் கொண்டிருந்தவர். அவரது கடுமையான விமர்சனங்களை இத்துறையினரே அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதே போல் இந்திய பிற மாநிலங்களுடன் குறிப்பாக கேரள இலக்கிய சூழலுடன் தமிழக சூழலை ஒப்பிட்டு தர்க்கித்து வந்தார்.

இறுதிக்காலத்தில் சிலர் அவரை அதிகம் வேதனைப்படுத்தியுமுள்ளனர். வலிதரும் இலக்குகளில் அவர்கள் குறியாக இருந்தார்கள். பிறப்பின் அடிப்படையில் அவர் படைப்புக்களில் புதிய புதிய அர்த்தங்கள் வலிந்து கண்டுபிடிக்கப்பட்டன. சிலர் கண்ணன் மீதான கோபதாபங்களுக்குரிய வடிகாலாகவும் அவரைத் தேர்ந்து கொண்டனர்.

*19.11.2005. அன்று லண்டனில் நடைபெற்ற சுந்தர ராமசாமி நினைவஞ்சலிக் கூட்டத்தில் ஆற்றிய உரையின் ஒரு பகுதி.*

## 2.

## கரோல்ட் பின்ரர்

நோபல் பரிசு அதன் இலக்கியத் தரத்திற்கு அப்பால் ஒரு அரசியல் பின்னணியிலேயே அது வழங்கப்படுவதாகக் கேள்விப்பட்ட ஆண்டு மிக்கயில்

சொலக்கோவ் என்ற விதிவிலக்கும் அதற்குள்தான் நிகழ்ந்திருக்கிறது. இப்போது மேலோங்கிவரும் ஒரு தலைப்பட்சமான ஆதிக்கக் கருத்துக்கள் பிடிப்பை மீறி இவ் விதிவிலக்குகள் மீண்டும் நிகழாது என்று எண்ணி ஏமாந்துள்ளேன். ஓகான் பமுக் (orhan pamuk) முகமட் எல்பரேட் (Mohamed Elbaradei) ஆகிய பெயர்கள் துருக்கிய, அமெரிக்க அரசுகளின் கோபத்திற்கு ஆளாகாமல் தவிர்க்கப்பட்டிருந்தாலும் ஆங்கில, அமெரிக்க புறங்கை ஒதுக்கலை மீறிய பின்ரரின் தெரிவும் ஒரு விதிவிலக்குத்தான்.

இளமையிலேயே மிகுந்த வாசிப்புப் பழக்கமுடையவராக இருந்தார் பின்ரர். ஆர்னோல்ட் பெனற் (Arnold Bennett) ஏ.ஜே.குரோனின் (A.J.Cronin) நாவல்களை விரும்பிப் படிக்கும் இவரது தாயாரிடமிருந்து இப்பாதிப்பைப் பெற்றுக்கொண்டார். புத்தகங்களை வாங்குவதற்கு பொருளாதாரம் இடம் கொடுக்காத நிலையில் தனது பன்னிரண்டாவது வயதில் கவிதை எழுதிய பின்ரருக்கு கன்னி பொது நூல் நிலையமே பெரும் வாய்ப்பாக அமைந்தது. வாழ்வில் ஒரு நீரூற்று என்று அந்நூல் நிலையத்தை பின்னாளில் பின்ரர் குறிப்பிட்டார். டொஸ்ரோவெஸ்கி, வோர்ஜினியா வுல்வ், டி.எச்.லோறன்ஸ், ரி.எஸ். எலியட் கெமிங்வே ஆகியோர்களை மட்டுமல்லாது கையில் கிடைத்தவற்றையும் வாசிக்கும் பழக்கமுடையவராகவே இருந்தார். இவரது பதினான்காவது வயதில் பெற்றோரால் வழங்கப்பட்ட நூல் *சேக்ஸ்பியரின் தொகுப்புக்கள்* ஆகும். இவரது பதினைந்தாவது வயதில் இவர் தானே வாங்கிய புத்தகம் ஜேம்ஸ் ஜொய்சின் யூலிசெஸ் ஆகும். இந்நூலை இவர் வைத்திருப்பதற்கு இவரது பெற்றோரிடமிருந்து பலத்த எதிர்ப்பை சம்பாதிக்க வேண்டியிருந்தது. இது பற்றி பின்ரர் இவ்வாறு நினைவு கூருகிறார். *அவர்கள் அந்நூலை வாசித்திருக்கவில்லை ஆயினும் அது உகந்ததல்ல என்பதாக அறிந்திருந்தார்கள். எனது தந்தை அதை வரவேற்பறையிலுள்ள புத்தக செல்பில் இருந்து எடுத்து விடும்படியும், தனது தாயார் உணவு பரிமாறும் அந்த அறையில் அவ்வகை நூலை வைத்திருக்க போவதில்லை என்றும் கூறினார்.*

பள்ளி நாட்களில் சக மாணவர்களிடையே டொஸ்ரா வெஸ்கியின் *கரமசோவ் சகோதரர்கள்,* காப்காவின் *விசாரணை* ஆகிய நாவல்களை படித்துப் பார்க்கும்படி கூறுவார். யூலிசெஸ் நாவல் பற்றியும் அதன் sub concious mind பற்றியும் பாடசாலை இதழில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இக்காலத்தைப் பற்றி அவரது நண்பர் இவ்வாறு குறிப்பிடுகிறார். கறோல்ட் அநேக முக்கிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். அவர்களுள் காவ்க்கா, பெக்கற் போன்றவர்கள் முக்கியமானவர்கள். இதையே பின்ரரும் கெமிங்வே, டொஸ்ரோவெஸ்கி, ஜோய்ஸ், கென்றி மில்லர் ஆகியோரைப்பற்றி படித்திருந்தாலும் பெக்கற்றும், காவ்க்காவுமே தம்முடன் தங்கியிருந்ததாகக் கூறுகிறார். பின்ரர் தான் எழுதிய நாடகங்கள் சிலவற்றில் நடித்தும், சிலவற்றை நெறிப்படுத்தியும் உள்ளார். இது தவிர கவிதைகள், அரசியல் கட்டுரைகள் என நிறையவே எழுதியுள்ள பின்ரர் வானொலி நாடகங்கள், திரைப்படத்திற்கான வசனங்கள் ஆகியவைகளிலும் ஈடுபாடு காட்டியுள்ளார். ஆரம்பத்தில் சுயசரிதை வடிவிலான The Dwarfs என்றொரு நாவல் எழுதியதாகவும் ஒரு குறிப்பு உண்டு. ஆயினும் அது அச்சில் வெளிவரவில்லை. இவருடைய *அமெரிக்கன் உதைபந்தாட்டம். .. . ,* இவரது இரண்டாவது முதல் முழுநீள நாடகமுமான *பிறந்த நாள் கொண்டாட்டம்* லண்டன் மேடையேற்றத்தின் போது படு தோல்வி அடைந்தது. அவை ஒரு வாரங்களே மேடையேற்றப்பட்டன.
அவற்றின் மொத்த வருமானமே 260 பவுண்ட் மட்டுமே. ஒரு பகற் காட்சியின்போது 2 பவுண் 9 சில்லிங். இது பற்றி பின்னர் கூறும்போது *அந்நாடகம் விமர்சகர்களால் படுகொலை செய்யப்பட்டது, கொத்திக் குதறப்பட்டது அது ஏனென்றே எனக்குத் தெரியவில்லை* என்றார்.
(-பின்ரர் 22 ) அது பற்றி வேறு ஒரு தடவை குறிப்பிடுகையில் I am not finished yet என்ற குறிப்பிட்டார். அது உண்மைதான். அடுத்து இரண்டு வருடங்களுக்குள் CARETAKER மேடையேற்றப்பட்டது. அது மிகுந்த வெற்றியை அளித்தது. கிட்டத்தட்ட லண்டனில் ஒரு வருடங்களாக மேடையேற்றப்பட்டது. அது பின்ரரின் வாழ்க்கையையே மாற்றி அமைத்தது.
நிறையப் பணம் சேர்ந்தது. அது படைப்பிற்கான சுதந்தரத்தை அளித்தது. அதைத் தொடர்ந்து இரவுப் பாடசாலை, நன்றுசேர்த்தல், காதலர், வீடு திரும்புதல் என வளர்ந்தது. இத்துடன் The Room, One for the road, Victoria Station, Mountain Lunuage எனப்பல சிறு நாடகங்கள். இவை ஆங்கில நாடகத்துறைக்கு மட்டுமல்லாது உலக நாடகத் துறைக்கே வளம் சேர்த்தன.

பின்ரருக்குக் கிடைத்த இப்பரிசு பற்றி அவரது சக நாடக ஆசிரியரான TOM STOPPARD கூறுகையில் தன்னுடைய படைப்புக்களை மிகச் செப்பமாகச் செய்த ஒருவருக்கு மட்டுமல்ல, தன்னைத் தொடர்ந்து மேடை நாடகங்களை எழுதிய அநேக நாடக ஆசிரியர்களது பாதையை மாற்றி அமைத்த ஒருவருக்கு இபபரிசு போயுள்ளது எனக் குறிப்பிடுகிறார். அதேவேளை CHRISTIPHER HITCHENS குறிப்பிடுகையில் பல தசாப்தங்களாக அரசியலுக்காக இலக்கியத்தைத் துறந்த ஒருவருக்கு இப்பரிசு கொடுக்கப்பட்டுள்ளது. இவரது அரசியல் மிகப் பழைமையானதும் பைத்தியக்காரத்தனமான அமெரிக்க எதிர்ப்புணர்வும் சர்வாதிகார ஆதரவும் கொண்டது. சீரழிந்த நோபல் பரிசு ஒழுங்கீனத்தின் ஒரு பகுதி இது என்கிறார்.
ஒரு படைப்புச் சார்ந்த வாதப் பிரதிவாதங்கள் ஆரோக்கியமானவை தான். ஆனால் ஒருவரது அரசியல் நிலைப்பாடு சார்ந்து அவரது படைப்பின் முக்கியத்துவத்தைக் குறைக்கும் செயல் அவ்வளவு ஆரோக்கியமானது அல்லவே. நமது தமிழ் சூழலில் பல பரிசுகள் சார்பு நிலை சார்ந்து தரமற்ற சில சக்கட்டைப் படைப்புக்களுக்கு சென்றடைந்து புகழ்பூத்த வரலாறு நமக்கு உண்டு.
நோபல் பரிசைப் பொறுத்தவரை சார்பு சார்பின்மை சார்ந்து சிலர் தவிர்க்கப்பட்டிருந்தாலும் பெற்றுக்கொண்டவர்கள் என்னவோ தகுதியானவர்கள் தான்.
-மு.புஸ்பராஜன் -

பாரிஸ்

# 4ம் மாடி, அறை இல. 304



**பிற்பகல்** 4மணியிலிருந்து
மரணதண்டனைக்குட்படுத்தப்பட்ட
கைதிபோல,
மணித்தியாலத்திற்கொருதடவை
இரத்தோட்டம், இரத்தழுத்தம்,
வாதம், பித்தம் பற்றிய
நாடித்துடிப்புகள் மதிப்பீடு
செய்தார்கள். ஆறரை மணிக்கு
அரைச்சாப்பாடு போட்டார்கள்.
நடுச்சாமத்திலிருந்து தண்ணீர்
அருந்த தடைச்சட்டம்
போடப்பட்டது. தூக்கமேயில்லை.
பல விதமான சிந்தனைகள்...

அதிகாலை நாலரைமணிக்கு,
மரணக்கைதியை மருந்துகள்
பூசிக்குளிப்பாட்ட
இருதாதிக்கைதிகள் வந்தார்கள்.
முக்கிய இடங்களிலுள்ள
உரோமங்களை வழித்தார்கள்.
எனது மீசையில் கைவைக்க
நான் விடவில்லை. ஐயோ
கஸ்ரப்பட்டு வளத்த மீசை,
விடுங்கோடி ராசாத்திமாரே எண்டு
கையெடுத்துக் கும்பிட
விட்டுவிட்டார்கள். சாட்டுக்கொரு
குழிப்பு. தொடர்ந்து ஆள்பாதி,
ஆடைபாதி அங்கவஸ்திரம்
அணிவிப்பு. தலையைச்சுற்றி
சீலைத்தொப்பி, காலுக்கு
கண்ணறைச்சீலை கவசம், அடி
நாக்கின் கீழ் நான்கு
வெள்ளரிக்கொட்டை மாத்திரை.
கடைசியாக, கட்டிலைச்சுற்றி
காவலரண்வேலி. காலை ஏழரை
வரை நான் தனிமையில்...

கட்டில் மெல்ல
நகரத்தொடங்கியது.
தலைமாட்டில் ஒருவர். கால்
மாட்டில் ஒருவர்.
மலைப்பிரதேசங்களில்
புகையிரதவண்டிக்கு, முன் ஒரு
எஞ்சின், பின் ஒரு எஞ்சின்
மாதிரிப் பவனி. கீழும் மேலும்
ஏத்தி இறக்கி ஒரு பிரத்தியேக
அறையினுள் ஓரங்கட்டி விட்டனர்.
தனிமையில் நான். பேச்சுத்துணைக்கு
ஒரு பேய் பிசாசு கூடஇல்லை.

முகமூடி தரித்த தலையாட்டிகள் மாதிரி இருவர் ஆனந்தமாக நுழைந்தனர். பண்பாகக்கதைத்தனர். பிரெஞ்சு மொழி எனக்கு பேச்சு வன்மை சுத்த சூனியம் என்பதனால் சிரிப்பாலே பதில் சொல்லி தலைஆட்டிச் சமாளிக்கும் வல்லமை இருந்தது. கைகளில் ஊசிகள், மருந்துவகைகள் ஏத்தி, இரண்டு, மூன்று நிற பொட்டளங்கள் மேலே தொங்கவிட்டார்கள். சரியாக ஒன்பதரை மணிக்கு சத்திரசிகிச்சை கூடம் என்னை வரவேற்றது. மின் விளக்குகள் கண்களைப்பிளிந்தன. என்னைச்சுற்றி ஒரு முக்கால் டசின் முகமூடிப்பட்டாளம். ஆளுக்கொரு ஆயுதம் கைகளில். போர்முனைக்குத் தயாராகும் பாணியாகவே எனக்குப்பட்டது. பத்துமணிக்கு மயக்கஊசி மூக்கை முற்றுகையிட்ட மயக்க வாய்வுக்கவசம்
சிறிது நேரத்தில் ஆட்டம் குளோஸ்.

நீண்ட நெடும் கனவு கண்டவன்போல் முழித்துப்பார்க்கிறேன். அதே அறை. சுற்றிவர பல்வேறு மருத்துவ அணிகல ஆபரணங்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தொழில் பார்த்துக்கொண்டிருந்தன. பேச்சுத்துணைக்கு ஆருமில்லை. கையை அசைத்தால் ஒரு கருவி கத்தும். காலை அசைத்தால் இன்னொரு கருவி கதறும். கழுத்தை ஆட்டினால் போதும் ஒரே அலறல். அந்த அலறலுக்கு இரண்டொரு தாதியர் பறந்தடித்து வருவர். தண்ணி கேட்டால் பஞ்சில தோச்சு நக்கத்தருவார்கள். சில மணித்தியாலங்கள் ஒரு சில்லெடுப்புத்தான்.

பிற்பகல் இரண்டு மணிக்கு பிள்ளை குட்டிகள் வருகைதந்தார்கள். அதுவும் முகமூடிகள் தரித்துத்தான் வந்தார்கள். இந்தக்கோலத்தில் பொஞ்சாதி ஆர், பிள்ளை ஆர் எண்டு கண்டுபிடிக்க கனநேரம் பிடிக்கும்.
மூத்தமகள் இத்துறையில் பயிற்றப்பட்டவர். சத்திர சிக்கிச்சை பற்றி விளக்கினாள்.

*கழுத்தடியில இருந்து இடது மார்பு கீழ்வரைவெட்டி, நெஞ்செலும்புக்கோர்வையை இயந்திர அரிவாளால் வெட்டி, நெஞ்சைப்பிளந்து இருதயத்தை வெளியில எடுத்து, இருதயத்தைத் தொடுத்திருக்கும் இரத்தக்குழாய்களைத் துண்டித்துவிட்டு, வெளியில எடுத்து வைச்சிட்டு செயற்கை இருதயத்தை வெற்றிடத்திற்குப்பூட்டி வேலை செய்ய விட்டிட்டு, முழங்காலுக்கு கீழே ஒண்டரைஅடி நீளத்துக்குப் பிளந்து அதில இருந்து தசைநார்கள் நாளங்களை வெட்டி எடுத்து இருதயத்துக்குள்ள வைச்சு பொருத்தி தைச்சு , செயற்கை இருதயத்தை திரும்பக் கழட்டிப்போட்டு, பழுதுபாத்த இருதயத்தை இருக்கவேண்டிய இடத்தில வைச்சுத் தச்சு, எல்லாத்தையும் முடித்தச்சுவிடுகிறது விடுகிறது மட்டுந்தான். கிட்டத்தட்ட நாலரை மணித்தியால விளையாட்டுத்தான் பப்பா எண்டாள் மூத்தமகள்....*

**- முகத்தார் எஸ். ஜேசு ரட்ணம் -**

## ஒளிவிழா

பிரான்ஸ் இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின் ஒளிவிழா இம்முறை 08.01.2006ல் மாக்ஸ் டொர்முவா மண்டபத்தில் நடைபெற்றது. குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பமான இவ் நிகழ்வில் ஆன்மீகப் பணியகத்தில் அங்கம் வகிக்கும் பணித்தளங்கள் ஒவ்வொன்றும் நிகழ்வுகளை மேடையேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. எல்லா நிகழ்வுகளும் அதிகமாக நடன நிகழ்வுகளாகவே அமைந்திருந்தன. கிறீத்தல் பணித்தளத்தால் நாடகம் ஒன்று மேடையேற்றப்பட்டது. இந்நாடகம் மேலும் செப்பனிடப் பட்டிருக்கவேண்டும்.

நாடகத்தின் உடையலங்காரம் நன்றாக இருந்தது. சார்சல் பணித்தளத்தின் பல் மொழிப்பாடல்கள் இரசிக்கக் கூடிதாக இருந்தது. மண்டபத்தில் இருந்த மக்கள் வெள்ளமும், அவர்களது அமைதியின்மையும் மேடையின் பின் புறம் இருந்தவர்கள் ஒலிவாங்கியின் ஊடாக வந்த சத்தங்களை கேட்டு பார்த்து நிகழ்ச்சிகளை சுவைக்க இடம் தரவில்லை. இருப்பினும் ஒவ்வொரு பணித்தளங்களின் ஊடாக பல இளம் கலைஞர்கள் வெளிப்பட்டமை பாராட்டக்கூடியது. அதே வேளை இளம் ஆண்கள் இந்நிகழ்வுகளில் வெளிப்படாதமை கவலைக்குரியதும் கவனத்துக் - குரியதுமாகும். பாரீசில் மிகப் பெரிய அளவில் மக்களை திரட்டக்கூடிய சக்தி படைத்த ஆன்மீகப் பணியகம் வருடத்தில் ஒரு முறை நடைபெறும் இந்நிகழ்வினை மேலும் தரமுள்ளதாக வருங்காலத்தில் மேடையேற்ற தொடர் அர்ப்பணமுள்ள பணிமூலம் முயற்சிக்க வேண்டுமென விருப்பம் தெரிவித்து, அவர்களது இடைவிடா முயற்சியை பாராட்டுகின்றோம்.

## முற்றத்து வாசம் கலைவிழா-6

குருநகர் சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் வருடாந்தம் நடாத்திவரும் முற்றத்து வாசம் கலைவிழா 18.12.05ல் 140 rue de clinancourt ல் உள்ள நல் ஆலோசனை மாதா ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிகள் யாவும் நன்கு திட்டமிடப்பட்டு, கலைஞர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு மேடையேற்றம் செய்யப்பட்டது. சென்ஜேம்ஸ் பழைய மாணவர் சங்கம் வருடாவருடம் தங்கள் உறுப்பினர்கள் மத்தியில் கலைத்திறன் போட்டிகளை வைத்து ஊக்கிவிப்பதுடன், அவர்களை மாவீரர் போட்டி நிகழ்வுகளிலும் பங்குகொள்ள வைப்பது வழமை. கடந்த வருடம் நடைபெற்ற மாவீரர் கலைத்திறன் போட்டி நிகழ்வுகளில் மேற்படி சங்க சிறார்கள் பல பரிசில்களை தட்டிச் சென்றமை தலைவர் பீலிக்ஸ் அவர்களின் உரையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டது. அத்தகைய விடாமுயற்சியுடனான உழைப்பின் பிரதி பலிப்பை அவர்களது கலைநிகழ்வுகளில் காணக் கூடியதாகவிருந்தது. ஒலிவாங்கியின் சாதகமான ஒத்துழைப்பு நிகழ்ச்சியின் தரத்தை ஒருபடி மேலே தூக்கிவிட்டது. திரு. ஏ.ஜோய் அவர்களின் கதம்பம் நிகழ்வும், டேமியன் சூரி அவர்களின் *கொற்றவன் நீதி* இசைநாடகமும் பாராட்டப்படவேண்டிய நல்ல முயற்சிகள். இருபது வயதுக்குட்பட்ட இரண்டு பெண்கள் இசை நாடகம் மூலம் வெளிப்பட்டமை தமிழ் கலையின் எதிர்கால வளர்ச்சியை கட்டியம் கூறி நிற்கிறது.

நிகழ்ச்சியில் மண்ணின் மைந்தர்களான உதைபந்தாட்ட வீரர் திரு சுவக்கீன் அந்தோனிப்பிள்ளை கிறேசியன், கவிஞரும் எழுத்தாளருமான மு.புஸ்பராஜன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர் நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள் திருமதி யசோதா எட்வேட், திருமதி ஜெனட் ஜோய் ஆகிய இருவரும் நிகழ்ச்சிகளை தொய்யவிடாது கிரமமாக தொகுத்து வழங்கினர். சனத்திரள் நிறைந்த ஒரு நல்ல நிகழ்வை பாரீசில் பலநாட்களுக்கு பின்னர் திறம்பட நடாத்தியமைக்காக சென் ஜேம்ஸ் பழைய மாணவர் சங்க நிர்வாகிகளை பாராட்டுகின்றோம்.

## முத்தமிழ் கலை மாலை 2005”

பாசையூர் சென் அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் கடந்த 10.12.05ல் 124, rue de Bagnolet ல் மண்டபத்தில் முத்தமிழ் கலை மாலை - 2005 இனை நடாத்தியது. மண்டபம் நிறைந்த மக்கள் புடை சூழ நடாத்தப்பட்ட இக்கலை நிகழ்வில் பல நடனங்களும், பழம் பெரும் பாசையூர் கலைஞர்களின் நாட்டுக்கூத்தும் நடைபெற்றது. சிறுவர்களின் நடனங்கள் சிறப்பாக இருந்தது. புலம் பெயர் நாடுகள் பலவற்றிலும் இருந்து வந்து கலந்து கொண்ட சிறந்த கலைஞர்கள், சிறந்த விளையாட்டு வீரர்கள் எனப் பலர் மேடை யேற்றப்பட்டு அனைவரும் பாசையூர் மண்ணுக்காக செய்த சேவைக்காக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக பாசையூர் புரட்சிக்கலைஞர்களின் வெளியீடான *ஈழத்து சிவந்த மண் நாட்டுக்கூத்து* இசைத் தட்டு தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரான்ஸ் பொறுப்பாளர் மேத்தா அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. நிகழ்ச்சிகளை திரு சி.கணேஸ் அவர்கள் அழகுற தொகுத்து வழங்கினார்.



# ஆருக்குச் சொல்லியழ?

**சிவலிங்கம் சிவபாலன்**

பாரீஸ் ஈழமுரசு வாரவெளியீட்டில் தொடராக வெளிவந்த 'ஆருக்குச் சொல்லியழ' என்ற தமிழச் சமூகம் மீதான பார்வை புத்தக வடிவில் வெளிவந்திருக்கிறது.

'ஆசைத்தம்பி' என்ற புனைபெயரில் அதன் ஆசிரியர் திரு. கந்தையா கஜன் எழுதிய இந்தக் கட்டுரைத் தொடரில் புலம்பெயர் வாழ்வியலில் காணப்படுகிற, குறைபாடுகளும், தனிமனித துதிபாடல்களும், தன்னினத்தையே சுரண்டிப் பிழைப்பு நடத்தும் தன்மைகளும், சீட்டு என்று சொல்லி மற்றவர் மடியில் கைவைக்கும் தன்மைகளும், மக்களையே கூறுபோட்டு மிதவாதம் பேசும் தனவந்தர்களின் வேர் நீட்சி பற்றியும், இன்னும் அநேகமானவையும் ஒரளவு தொட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

புலம் பெயாந்து தனிமனிதர் மட்டுமல்ல அவர்களுடனான வக்கிரப் புத்திகொண்ட மனங்களும் தான் என்பது இங்கு தெரியவருகிறது. மனிதன் என்று எடுத்துக்கொண்டாலே, அவனுக்கு எத்தனை முகங்கள் என்பதை உணர்ந்துகொள்ள கால அவகாசம் அதிகமாகத் தேவைப்படுகிறது.

ஐந்தறிவு கொண்ட மிருகங்களை வழிக்குக் கொண்டு வர முடிந்த அளவிற்கு ஆறறிவு கொண்ட மனிதனை வழிக்கு கொண்டு வர முடியவில்லையே என்ற ஆதங்கம் தத்துவவியலாளர்களால் விதந்துரைக்கப்பட்ட இவ் வேளையிலும், மாசுபட்ட மனித மனங்களையும், மனங்கள் மாசுபடவேண்டும் என்ற பேரார்வத்துடன் நடமாடும் மனிதர்களையும் வேறுபடுத்திப் பார்க்க முடியவில்லை என்பது நன்கு புலனாகிறது. கட்டுக்கோப்பான ஒரு சமுதாயம், கட்டுப்பாடுகளைத் தகர்த்து நல்வழி என்ற நன்னிலை கடந்து, தீய செயல்களையே வரவேற்று உபசரிக்குமானால், கேடு மற்றவர்களுக்கு அல்ல. அடிமைப்படுத்தப்படுகிறோம், துன்புறுத்தப்படுகிறோம், ஒதுக்கிவைக்கப்படுகிறோம் என்பதுடன் நிம்மதியானதும், நன்மை பயக்கக்கூடியதுமான வாழ்வு மட்டுமே எமக்குவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு பிரதிபலனாக, வாழ்விட அனுமதி கிடைத்ததின் பின்னரான எம் நடவடிக்கைகள் தான் என்ன?

எதைப்பெற வந்தோம் .... எதைச் சாதித்து மகிழ்கிறோம். கஜன் சுட்டிக்காட்டியது ஒரு சில சொட்டுக்கள் தான். சுட்டிக்காட்ட முடியாமல் போனது ஏராளம். வாழையடி வாழையாக அடாவடித்தனங்களும், அத்துமீறல்களும், சுரண்டல் போக்குகளும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது. ஒரு துளியேனும் குறைந்ததாக எந்த வித தகவல்களுமில்லை.

'ஆருக்குச் சொல்லியழ' என்ற பெருமூச்சுகளுடன் தான் வாழ்க்கைப் பயணம் தொடரப்போகிறதா? இன்னும் எத்தனை கோணத்தில் எம் பயணம் தடைப்படப் போகிறது. சிந்தனைகளும் செயல்பாடுகளும் நல்லவையாக இருக்க நாம் எதைப் பின்பற்ற வேண்டும். இனியாவது எங்களுக்கு நிம்மதி கிடைக்குமா...?

எத்தனையோ ஞானிகளும், தீர்க்கதரிசிகளும், மகாத்மாக்களும், அறிஞர்களும் தம்மளவிலான வாழ்வியலின் அனுபவங்களை தத்துவார்த்தமாக எழுதியும் வாழ்ந்து காட்டியும் விட்டுச் சென்றிருக்கிறார்கள். அவையெல்லாம் 'வீணோ' என்றே எண்ணத் தோன்றுகிறது. எத்தனையோ அமைப்புக்கள் தோன்றியாகிவிட்டது, மறைந்தாகிவிட்டது. நல்லபடி வாழ மனிதனை முயற்சித்துமாகிவிட்டது. பலன்....?

இருபத்தியெட்டு இலட்ச வருட முதலே மனிதன் மனிதனாகத் தன்னை உருவாக்கிக் கொண்டான் என்பது ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்ட செய்தி. அதற்கு முன்னால் மனிதன் பண்படையாமல், வாழ்வியல் என்றால் என்ன என்று தெரியாமல் வாழ்ந்து முடித்திருக்கின்றான். அந்த நிலைக்கு தான் நாம் இனி எம்மை இட்டுச் செல்லப் போகிறோமா...? இருபத்தோராம் நூற்றாண்டில் வாழ்கின்றோம். அதுவும் கணனி யுகத்தில் வாழ்கின்றோம். தனவந்த நாடுகளின் உலக மயமாக்கலின் தேவையை எமது முன்னேற்றத்திற்காக பயன்படுத்தி வாழாது, அதன் உள்ளர்த்தம் தெரியாமல் ஏனோ தானோ என்று பகட்டாக வாழப்போகிறோமா? இன்னும் எம்முன்னால் இருக்கக்கூடிய கேள்விகளுக்கெல்லாம் பதிலில்லாமல் வெறுமையான மனங்களின் புகைச்சல்களையெல்லாம் யாருக்குச் சொல்லி அழப்போகின்றோம்.

பத்துப் பேர் கூடி ஒரு முடிவு எடுக்க முடியாமல் தவிக்கும் இவ்வேளையில், ஒரு தனி மனிதனால் எத்தனை கேள்விகளுக்கான முடிவுகளை எடுக்க முடியும். பேனா முனைகள் எழுதிக்கொண்டு தான் இருக்கின்றன. பதிலுக்காக அது இளைப்பாறுவதில்லை. புதிது புதிதாக எதை எதையோ எழுதுகிறது.

எதை எதையோ பதிலாகப் பெற முனைகிறது.. கேள்விகள் தொடர்கின்றனவே தவிர பதில் கிடைப்பதில்லை. பலம் உள்ளவை வாழும் என்ற டார்வின் கூற்றுப்படி பலவும் வாழ்ந்து கொண்டுதானிருக்கிறது. ஆனால் நல்ல படியாக அல்ல. நல்ல குறிக்கோளை முன்வைத்து அல்ல. பலமுள்ளதாக உருவாக வேண்டுமெனில், மற்றவர்களைச் சுரண்ட வேண்டும் என்ற நம்பிக்கையில் மனித மனங்கள் இருக்கின்றன போலும். நல்லவர்களைக் காட்டிலும் இன்று தீயவைகளே முன்னேற்றமும் தன்னிறைவும் கொண்டு வாழத் தலைப்பட்டு விட்டன. இவற்றை யெல்லாம் ஆருக்குச் சொல்லி அழ...? அழுதும் பயன் தான் கிட்டிவிடுமா என்ற எதிர்பார்ப்புடனும் கேள்வியுடனும் இந்தப் பேனா முனையும் கரைகிறது.

# பாரிஸில்

# குறும்படநாட்கள்



கூத்துப்பட்டறை - நோர்வே, சுதந்திர கலைத்திரைப்பட அமைப்பு - கனடா பாரிஸ் நண்பர்கள் வட்டம் என்பன இணைந்து டிச 4, டிச. 18, ஜன.21 ஆகிய தினங்களில் பாரிஸில் குறும்பட நாட்களை நடத்தினர்.

பாரிஸ் இலக்கிய நிகழ்வுகளில் உயிர்ப்புடனும், துடிப்புடனும் செயற்பட்ட கலைச்செல்வனை மனசிருத்தி நடாத்தப்பட்ட குறும்படநாட்களில் இலங்கை, இந்தியா, கனடா, நோர்வே ஆகிய நாடுகளில் தயாரிக்கப்பட்ட முப்பதிற்கும் மேற்பட்ட குறும்படங்கள் காண்பிக்கப்பட்டன.

அசோக்கின் முன்முயற்சியால் நடாத்தப்பட்ட இந் நிகழ்வுகளுக்கு அரவிந் அப்பாத்துரை, ஆசிரியர் சச்சிதானந்தம் அவர்கள் மண்டபங்களை வழங்கி உதவினர்.

குறும்படநாட்களில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் ஆர்வத்துடன் பங்குபற்றினர். பாரிஸ் போன்ற சூழலில் இது ஒரு உற்சாகமான எண்ணிக்கைதான்.

நிகழ்வுகளின் இடையிடையே படங்கள் முடிந்ததும் அவைபற்றிய அபிப்பிராயங்கள் - விமர்சனங்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டமை ஆரோக்கியமாக இருந்தது. இவை படைப்பாளிகளையும் எட்டுமானால் நல்லது.

மூன்றாவது நாள் நிகழ்வில் இலங்கையில் தயரிக்கப்பட்ட கிச்சான் படத்தின் இயக்குனர் திரு. விமல்ராஜ் அவர்களும் கலந்து கொண்டார். அவருடனான கலந்துரையாடல் பயனுள்ளதாக அமைந்தது.

## கிச்சான்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டு சிதைந்து போன ஒரு குடும்பத்தின் கதை.

இராணுவம் கைது செய்துபோக தந்தை காணாமல் போகிறார், வறுமையின் நிமித்தம் படிப்பு வாசனையே அறியாத தாய் வெளிநாடுபோய் அந்தத் தொடர்பும் அறுந்துபோக கைக்குழந்தையாக பேத்தியுடன் வளரும் கிச்சானின் கதையே படமாகத் தொடர்கிறது. தொய்வுகளேதுமின்றி, தேவையற்ற காட்சிகளின்றி சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு மிக நுட்பமாகவும் நேர்த்தியாகவும் தயாரிக்கப்பட்டிருந்தது கிச்சான்.



பாடசாலைக்கு போகமுடியாத வீட்டுச்சூழலில் கிச்சான் படிப்பை இடைநிறுத்தி ஒரு பல்கலைக்கழக உணவுச்சாலை ஒன்றில் வேலைக்குச்சேர்கிறான். அங்கு பத்துப்பதினொரு வயது நிரம்பிய கிச்சானிடம் வேலை வாங்கும் முறை, வறுமைசூழலில் அவனது, அவனது பேத்தியினுடைய ஏக்கங்கள் அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. கமரா பற்றிய எந்தவித பயமோ நெருக்கடியோ இன்றி கிச்சான் சிறபாக நடித்திருந்தான்.

படம் முடிகையில் இலங்கையில் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் - துன்புறும் அனாதைச்சிறுவர்கள் அனைவரும் எம்முன்னால் நிழலாடுகின்றனர்.

குறும்படமொன்றிற்கு சற்று அதிகமான தொகைதான். 7இலட்சம் ரூபாக்கள் செலவு செய்திருக்கிறார்கள். தேர்ந்த தொழில்நுட்பவியலாளர்களை பயன்படுத்தியிருக்கிறார்கள். படம் தயாரிப்பதற்கு முன்னதாக கதை மற்றும் தயாரிப்பு வேலைகளிற்காக அதிககாலம் உழைத்ததாக தெரிவித்தார் இயக்குனர் விமல்ராஜ். இவையே படத்தின் வெற்றிக்கு முக்கிய காரணிகளாக அமைகின்றன.

மேலும் இயக்குனர் விமல்ராஜ் கருத்துத்தெரிவிக்கையில், எங்களாலும் முடியும் என்ற நம்பிக்கையை கொடுத்திருக்கிறது கிச்சான். பொருளாதார ரீதியிலும் வெற்றிகண்டுள்ளோம் என்றார்.

○

**சுமதிரூபனின் இரண்டு படங்கள்.**

கனடாவில் வதியும் எழுத்தாளர் சுமதிரூபனின் இரண்டு படங்கள் மனிசி, ருசி ஆகியவை திரையிடப்பட்டன.

பெண்ணிலைவாத பிரச்சாரமாக்கப்பட்ட மனிசி படம்பற்றி கலந்துரையாடலின் போது சற்று இறுக்கமான விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. நீண்ட நேரம் கதைக்கப்பட்ட படமும் கூட.

**ருசி** முக்கியமான படமாக அமைந்தது. கனடாச்சூழலில் தாயும் தந்தையும் வேலைக்குப்போக தனித்திருந்து தவிக்கும் ஒரு சிறுமியின் உளவியற்சிக்கல். இன்னும் வீட்டில் வாடகைக்கு இருக்கும் இளைஞனை நம்பி பெற்றோர் சிறுமியை விட்டுச்செல்ல அவன் தனது காமப்பசிக்கு இரையாக்குகிறான். எதுவும் புரியாமல் வெருண்டுபோயிருக்கும் குழந்தை வெளியே சொல்லவும் பயந்து பிரமைபிடித்தவள் போலாகிறாள்.

கடைசியில் பாடசாலையில் இருந்து வீட்டுக்குவர மறுத்தபோது தான் விஷயம் வெளியாகிறது. மனதை உறையவைக்கும் கதை. யதார்த்தமாக படமாக்கப்பட்டிருந்தது. நடிகர்கள் இயல்பாக நடித்திருந்தனர். - குரு

... மிகுதி அடுத்த இதழில் தொடரலாம்....



# பொங்கல் விழா

திருமறைக்கலாமன்றம் - பிரான்ஸ் கடந்த 15.01.2006 ல் தாம் வருடாந்தம் தவறாது நடாத்திவரும் பொங்கல் விழாவினை நடாத்தியது. கடந்த வருடம் சுனாமி கடற்கோள் அனர்த்தம் காரணமாக அமைதி வழிபாடாக நடாத்திய திருமறைக்கலாமன்றம், இவ்வருடமும் அவர்களது முக்கிய உறுப்பினர் ஆர்மோனிய வித்துவான் திரு றொபட் கிளைவ் அவர்களின் மரணம் காரணமாக அமைதி வழிபாட்டுடனேயே விழாவை நடாத்தியது. பொங்கல் படைக்கப்பட்டு 45 நிமிடங்கள் அமைதிவழிபாடு நடாத்தப்பட்டது. விசேடமாக இலங்கையில் சமாதானம் மலரவேண்டும் என அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். பின்னர் கலை நிகழ்வுகள் நடைபெற்றது.





இந்நிகழ்வுகளில் செல்வி எமர்லினா வியூ குழுவினரின் குறத்தி நடனமும், செல்வி நிலோனி சந்திரமோகன் அவர்களின் நடனமும், செல்வி அஞ்சலி நந்தகுமார் அவர்களின் தனிநடிப்பும் இடம்பெற்றது. நடனங்கள் அனைவரையும் கவர்ந்தது. வந்திருந்த பார்வையாளர் மத்தியில் செல்வி அஞ்சலி நந்தகுமார் அவர்களின் சுனாமி பற்றிய தனிநடிப்பு திரும்பவும் சுனாமியின் சோகத்தை நினைவூட்டி மறைந்தது. அவர் மிகச்சிறியவராக இருந்த பொழுதிலும் பார்வையாளர் பலரை தனது ஆற்றல் உள்ள நடிப்பால் அழவைத்தமை மெய்சிலிர்க்கச் செய்தது. எதிர்காலத்தில் கலைத் துறையில் அவரது வளர்ச்சி பிரகாசமானது என்பதை மறுப்பதற்கில்லை. அவரை ஊக்கிவித்த பெற்றோரை பாராட்டல் தகும்.

முக்கிய நிகழ்வாக அமரர் அந்தோனிப்பிள்ளை றொபட் கிளைவ் அவர்களின் நினைவஞ்சலி இடம்பெற்றது. அவரது அர்ப்பணமுள்ள சேவையினையும், இசைத்துறையில் குறிப்பாக இசை நாடகம், நாட்டுக்கூத்து ஆகிய துறைகளில் ஆர்மோனியம் வாசிப்பதில் உள்ள அவரது திறமைகள், ஆளுமை என்பன திரு டேமியன் சூரி, திரு.மனோ ஆகியோரால் நினைவுகூரப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் அவரை நினைவுகூர்ந்து பிரான்ஸ் திருமறைக்கலாமன்றத்தால் பிரசுரமாக்கப்பட்ட நூலும் வெளியிடப்பட்டது.



## OHANA SRILANKA



ஓவியம் : வாசுகன்

சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலனுக்காக பிரான்ஸில் இயங்குகிறது Ohana Srilanka அமைப்பு. கலை நிகழ்ச்சிகள்மூலமும் நிதிசேகரித்து வருகிறார்கள். 28.01.2006 அன்றும் சென்.டெனிஸ் மண்டபத்தில் நிகழ்ச்சிஒன்றை ஒழுங்கு செய்திருந்தார்கள். அதில் திருமறைக்கலாமன்றமும் கடலோரக்கிராமம் என்னும் நாடகத்தை வழங்கியிருந்தது.

## மகாஜனாவின் செய்தி இதழ்




மகாஜனக்கல்லூரி ப.மா.சங்கத்தின் பிரான்ஸ் கிளையினர் செய்தி இதழொன்றினை வெளியிட்டுள்ளனர். அதில் கல்லூரி நினைவுகளை மீட்கும் கட்டுரைகள், கல்லூரியின் இன்றையநிலை, சங்கங்களின் செயற்பாடுகள் போன்றன பதிவாகியுள்ளன.

திருமறைக்கலாமன்றத்தின் பொங்கல் 2006



CPA Panadura members at Pongal site



Mr.James Thompson,Lecturer from Manchester University is putting rice

# கோழிப்பிரியாணி

- க. வாசுதேவன்.

**கோழி** குஞ்சுகளின் அழகை ரசிப்பதில் பலமணிநேரங்களைக் கழிக்கலாம். அவற்றை உற்று நோக்கி அவற்றின் ரம்யமானதும், மென்மையானதும், தெய்வீகமானதுமான அசைவழகை நம்மனதுள் உள்வாங்கும் வேளைகளில் நமக்கும் அவற்றிற்குமான ஒரு உறவு எம்மையும் மீறி உருவாகிவிடுகிறது. ஒரு தியானத்திலீடுபட்டிருப்பது போன்ற ஆசுவாசம் எம்மைச் சுற்றிப் படர்ந்து கொள்கிறது.

கோழிப்பண்ணை என்று நடத்தாவிட்டாலும், அம்மா அவ்வப்போ அடைவைக்கும் போது முட்டைகள் குஞ்சாகி வெறியேறுவதைக் காத்திருப்பது ஒரு ஆனந்தமான விடயமாக இருந்தது.

அம்முறையும் அப்படித்தான நடந்தது. அம்மா பதினாறு முட்டைகளை அடைவைத்து ஒட்டுமொத்தமாக ஏழு குஞ்சுகள் பொரித்தன. கடைசியாகக் கோதை உடைத்துக்கொண்டு உலகை எட்டிப்பார்த்த கறுத்தக் குஞ்சின் மேல் எனக்கு எப்போதுமே பிரத்தியேகமாக பிடிப்பு. என் அக்காவிற்கு அண்மையில் பிறந்த ஆண்குழந்தையை, அதாவது என்மருமகனைப் பார்ப்பது போன்ற ஒரு உணர்வு என்னிடம் அந்தக் குஞ்சைப் பார்க்கும் போது ஏற்பட்டுக் கொண்டேயிருந்தது.

கோழிக்குஞ்சுகள் தாய்க்கோழியுடன் குப்பைத்திட்டிகளிலும் வயல்களிலும் நின்று புழுக்களையும் தானியங்களையும் கொத்திக் கொத்தி உண்ணும் வேளைகளில் அவற்றில் மூன்றை பருந்து கொண்டு போய்விட்டது. எத்தனைதான் கவனமாக இருந்தாலும் பருந்து எப்படியோ தன் இரையைக் கொண்டு போய்விடுகிறது. பருந்து வட்டமிடுவதைக் கண்டாலே கறுத்தக்குஞ்சு தாய்க்கோழியின் அண்மையில் சென்று அதன் சிறகுகளுக்குள் ஒளிப்பதற்குத் தயாராகிவிடும். அதன் மதிநுட்பம் என்னை எப்போதுமே வியக்க வைத்தது.

ஒருமுறை தன் கறுத்தக் குஞ்சை நோக்கி மிக வேகமாகப் பருந்து இறங்கிப் பறந்து வருவதைக் கண்ட தாய்க்கோழி தன் முழுப்பலத்தையும் கூட்டிக் காற்பனை உயரத்திற்குக் பறந்து பருந்துடன் போராடியது. மறக்க முடியாத் காட்சி. ஒரு கோழியால் இத்தனை தூரம் பறக்க முடியும் என்பதை நேரில் கண்ட போது ஆச்சரியமாக இருந்தது. கறுத்தக் குஞ்சு அதிஸ்ரவசமானது. அன்றும் பருந்திடமிருந்த அது அரும்பொட்டில் தப்பித்துக் கொண்டது.

பின் வளர்ச்சியின் காலப்போக்கில் அது ஒரு சேவல் என்பதும்தெரியவந்தது. அழகான, எடுப்பான வால், கம்பீரமான நடை, ரத்தச்சிவப்புக் கொண்டையென அதன் கவர்ச்சியும் மதமதப்பும் கண்ணைப் பறிக்கும். அதன் நிறம்கூட மாற்றமடைந்து மினுங்கும் இறகுகள் அதனைப் போர்தியிருந்தன. அதிலிருந்து உதிரும் கருநீலச் சிறகுகளை மயிலிறகுகள் என்னு பொய்கூறி என் சக பாடசாலை மாணவர்களுக்குப் பரிசளித்திருக்கிறேன். யாரும் அவை சேவலிறகுகள் எனச் சந்தேகிக்காத அறவிற்கு அவை அழகாயிருந்தன. என் சேவல் என வீட்டில் எல்லோருரிடமும் நான் கூறிக்கொள்ளும் என்சேவல் நண்பனுக்கு நான் சூரதேவன் எனப்பெயர் வேறு சூடியிருந்தேன்.

கூரையில் நின்று அவன் அதிகாலையில் கூவும் போது அவன் குரல் ஒரு அதிகால இசையாக என்னுள் வீழ நான் புரண்டு படுத்து இதமாக மீண்டும் என் தூக்கத்தைத் தொடருவேன். அதிகாலையில் விழித்தெழும்போது அவனைப்பற்றிய பெருமையான எண்ணங்கள் என்னில் நிரம்பி வழியும். எனது சாப்பாட்டில் எப்போதும் ஒரு பகுதியை மறைமுகமாக அவனுக்கு ஒதுக்கிக்கொடுத்தேன்.

குயில் கூவும் பருவகாலத்தின் ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலைப் பொழுதில் எழுந்து இலுப்பைப் பூக்கள் பொறுக்கிக்கொண்டு வீடு திரும்பிய போது அது நடந்தது. எனது தந்தையார் சூரதேவனைத் துரத்திக் கொண்டிருந்தார். பாதிப்பறப்பும், பாதி ஓட்டமுமாகச் சூரதேவன் தப்பிக்கொண்டேயிருந்தான். அவனின் அலறல் ஒலி என் இதயத்தை பிளந்து போட்டது. நடக்கக்கூடாத ஏதோ ஒன்று நடக்கப்போகிறது எனம் ஓலமிட்டது. எதற்காக என் சேவலை இவர்கள் பிடிக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. அம்மாவிடம் வினாவினேன். அது அடிக்கடி அயல்வீடு செல்வதாகவும், அதனால் கொஞ்ச நேரம் அதை அடைத்து வைக்கவேண்டுமென்றும் வேறொன்றுமில்லையென்றும் அம்மா கூறினார்.

பின்னர் என்னை குஞ்சியம்மா வீட்டிற்கு விளையாட அனுப்பிவிட்டார்கள். மதியம் திரும்பி வந்தபோது எனக்கு தலைநிறைய நல்லெண்ணை பூசி நன்றாக முழுக்காட்டி விட்டார்கள். மத்தியானம் நல்ல உறைப்புப் போட்ட இறைச்சிக் கறியுடனும், கத்தரிக்காய் பால் கறியுடனும் வயிறு முட்ட உணவு தந்தார்கள். வளரும் பிள்ளை வடிவாகச் சாப்பிடு எனக்கூறி அம்மா என்னைப் பலதடவை உண்ணவைத்தார். அன்று வீட்டில் எல்லோருக்கும் நல்ல சாப்பாடு.

மறுநாள் தான் எனக்கு விடயம் தெரியவந்தது. கொடியவர்கள், இரக்கமற்றவர்கள், துரோகிகள் செய்த கொலையும் அவர்களுடன் நான் என் நண்பன் சூரதேவனைப் பகிரந்துண்டேன் எனும் விடயமும்

என்னைத் தீயாய் எரிய வைத்தது. என்குடலுள் ஒரு வித அருவருப்புக் குடிகொண்டுவிட்டிருந்தது. ஒரு வாரகாலமாக நான் மருந்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். என் நாடிகளுக்குள் சேலையின் ஏற்றப்பட்டது.

என் எட்டுவயதில் என்கேற்பட்ட இந்த அனுபவம் என்னுள் நீண்டகாலமாக தாக்கத்தை ஏற்படுத்திக்கொண்டிருந்தது.

பின்னர், பொரித்த கோழித்துண்டங்கள் போட்ட புரியாணிகளின் வாசம் மூக்கைத் துளைக்க ஆரம்பித்த காலங்களில் நான் மீண்டும் கோழிக்கறி உண்ண ஆரம்பித்தேன். இப்போதெல்லாம் உணவகங்களுக்குச் செல்லும் போது கோழியா, ஆடா, மாடா என சர்வசாதரணமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கு நான் சர்வசாதாரணமாக எனது தெரிவை வெளிப்படுத்துகிறேன்.

விலங்குக் கொலைகள் பற்றிய என் கோட்பாடுகளுக்கும், என் ஜீவனத் தேவைகளுக்குமிடையிலான நெருக்கடிகள் என்னை இப்போது அணுகுவதில்லை.
நான் குழந்தையாக இருந்தபோது இருந்த புனிதம் இன்று என்னிடம் இல்லை. அவ்வாறு நான் புனிதமாக இருந்திருந்தால் என் ஜீவனத்தேவைகளுக்கும் எனக்குமான நெருக்கடி என் இருந்தலை மூழ்கடித்திருக்கக்கூடும்.

என் நண்பனாக நான் கருதிய சேவலை என்னையறியாமலே நான் உண்டபோது என் குடல் நோய்கொண்டது. நாளை நான் ஒரு மாட்டை வளர்க்க நேர்ந்தால், அதனுடன் நட்பு வைத்தால், அதன் இறைச்சியை என்னால் உண்ண முடியாது. அதை என்னால் கொல்ல முடியாது. அதையாரும் இறைச்சிக்காகக் கொல்வதை என்னால் அனுமதிக்க முடியாது. ஆனால், அதற்காக நான் வாழ்நாள் முழுவதும் மாட்டிறைச்சியை உண்ணமாட்டேன் எனச் கூறமாட்டேன். எனக்குத் தெரிந்தவர்கள் யாரும் அப்படிச் செய்ததில்லை.

இறைச்சியைச் சர்வசாதாரணமாக உண்ணும் நான், நான் வளர்க்கும் சேவலுக்காகவும், நான் வளர்க்கும் ஆட்டுக்குட்டிக்காகவும், என் வீட்டுப் பசுவிற்காகவும் ஏன் எத்தனை இரக்கம் கொள்கிறேன்? அவற்றின் மீதான என் அபிமானம் ஏன் குறுகிக்கிடக்கிறது?

என் கண்முன்னால், எனக்கு நெருக்கமாக, என் அறிவிற்கும் உணர்விற்கும் அண்மித்த அனுபவங்கள் மட்டும் என்னைத் தீண்டுகின்றன. மிகுதியை நான் அலட்சியம் செய்து விடுகிறேன். என்னை அண்மித்த அநியாயங்கள், என்னைத் தீண்டும் அநியாயங்கள் மட்டுமே எனக்கு அநியாயமாகப் படுகின்றன.

எங்கெங்கோ, யார் யாரோ வளர்த்த, கொன்ற கோழிகளையும், ஆடுகளையும், மாடுகளையும், சர்வசாதாரணமாக உண்டு கொள்ளும் என்னால் நான் நட்புடன் வளர்த் ஒரு மாட்டை கொல்ல முடியாது. அதையாரும் கொல்வதை என்னால் அனுமதிக்க முடியாது. அதன் இறைச்சியை என்னால் உண்ணமுடியாது.

சுயஇருத்தலின் தேவைகளுக்கும், புறவயமான இருப்புகளுக்குமிடையில் தோற்றமுறும் முரண்பாடுகளும், உடன்பாடுகளும், உறவுகளும், பகைகளும் விசித்திரமானவையெனத் தோன்றுகிறது.

*13.02.2006.*

## ஆதலினால் காதல் செய்வீர்

நோர்வேயில் வசிக்கும் கவிஞரும், ஒளிஓவியருமான தமயந்தியின் ஒளிப்படங்களின் தொகுப்பு ஆதலினால் காதல்செய்வீர் என்னும் தலைப்பில் தொகுத்து ஒளித்தட்டாக வெளிவந்திருக்கிறது.

பாரிஸில் நடந்துமுடிந்த 32வது இலக்கியச்சந்திப்பின் இறுதி நிகழ்வாக தமயந்தியின் ஒளிஓவியங்கள் திரையில் காண்பிக்கப்பட்டது..

புகைப்படக்கலைக்கும் எமக்கும் இடையோன இடைவெளி அதிகம்தான். ஆனால் இடைவெளியை குறைக்க முற்பட்டிருக்கிறார் தமயந்தி.
தன்னை ஈர்க்கின்ற புகைப்படங்களை தனது கருவிக்குள் அடக்கி பின் அவற்றைத்தொகுத்து அவற்றிக்கு கவித்துமான தலைப்பிட்டு மகிழ்கிறார்.
பின் அவற்றிற்கு மெல்லிய இசையையும் வழங்கி திரையில் காண்பிக்கும்போது சற்றுமாறுபட்ட உணர்வு எழத்தான் செய்கிறது. ஒரு குறும்பட உணர்வைத்தருகிறது. இன்னும் மௌனமான அந்தஒளிப்படங்கள் அந்தக்கணங்களில் பலவேறு பரிமாணங்களில் விரிகின்றன.

கடற்கரையோரத்தே அமைதியாக இருக்கும் வீடுகள் இரண்டு ஆதலினால் காதல் செய்வீ என்னும் தலைப்பில் வெளிப்படும் போது அந்த வீடு, வீட்டில் வாழ்ந்த, வாழ்கின்ற மாந்தர், காதல் மோதல் எனப்பலவாறாக அந்த ஒளிஓவியம் விரிகிறது.




காத்திருப்பு என்னும் தலைப்பில் ஒரு வெறுமையான வாங்கு, ஒரு மூலைக்குள் இருக்கும் அநாதரவான படிக்கட்டு, திறந்திருக்கும் ஒற்றைக்கதவென திரையில் தோன்றும் போது பார்ப்பவர்களின் சிந்தனைகள் பலகோணங்களில் விரிவது தவிர்க்கமுடிாமல் ஆகிவிடுகிறது.

புலம்பெயர் சூழலில் சாத்தியமான ஒரு இலக்கிய முயற்சி. தமயந்தியை வாழ்த்தி வரவேற்போம்.

- ராம்




# அகதியாக ஆசைப்பட்டு....



- செல்வரட்ணம் ஜெயந்தன்

இப்போது அவர்கள் சேவ்ரி போட்டில் தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் விட்டுவிட்டுப்போய்விட்டால் எங்களால் எதுவும் செய்யமுடியாது. துணிந்த எங்கள் கைகள் ஓய்ந்தன. நெஞ்சு திக்திக்கென்றது. தடுமாறினோம். சிலர் பயத்தில் அழவும் தொடங்கினார்கள். எங்களுடன் இருந்த சிங்களப்பெடியன் ஒருவன் ஓடிப்போய் ஏஜென்சியின் கால்களைக் கட்டிப்பிடித்துக் கெஞ்சினான். மன்றாடினான். அழுதும்பார்த்தான்.

ஏஜென்சி நிறுதிட்டமாகச் சொன்னான். இதில் ஒரு மாற்றமும் இல்லை. நீங்கள் அமைதியாகாவிட்டால் நாங்கள் அசைந்து கொடுக்கப்போதில்லை என்று இன்னும் மிரட்டினான்.

நாங்கள் நிலைமைச் சுதாகரித்து ஏஜென்சியை திரும்பவும் வரப்பண்ணினோம். யாராவது ஆத்திரத்தில் ஏஜென்ஸியை கொலைசெய்துபோடலாம் என்றும் எனக்குப்பயமாக இருந்தது. ஆனால் அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. இப்போது நாங்கள் வெருட்டுவதுபோலவும், கெஞ்சுவதுபோலவும் ஏஜென்ஸியிடம் ஒரு தவணைகேட்டோம்.

இன்னும் ரெண்டு கிழமையில் கொண்டுபோகலாம் என்றார்கள். இரண்டாவது கிழமையும் முடிந்த கையோடு ரோலர் ஒன்று எங்கள் கப்பலை நோக்கி வந்துகொண்டிருந்து. எங்களுக்கு கவலையிலும் சிறு மகிழ்ச்சி. அந்தரோலரில் மீன்பிடிகாரர் மூலமாக எங்களுக்கு மீன்கள் அனுப்பிவைக்கப்படுவதாகவும் எண்ணி மகிழ்ந்தோம். ரோலர் கிட்ட வந்தது. அதில் இருந்தவர்களை பார்க்க எங்களைப்போலவே தெரிந்தார்கள். இன்னும் கிட்டவந்தது. அதிலிருந்தவர்களும் தமிழர்கள்தான். எங்களைப்போல அகதியாக ஆசைப்பட்டு வந்தவர்கள்தான்.

எங்களுக்கு ஆத்திரம் வந்துதான் என்ன செய்வது? அவர்களுக்காகத்தான் ஏஜென்சி எங்களைத் தாமதித்து வைத்திருந்தான். எங்களுடைய கப்பலுக்கு கிட்ட ரோலர் நின்றது. சிறு நிமிடங்கள் மட்டுமே அமைதிநிலவியது. எங்களில் சிலர் வெறிகொண்டெழுந்தார்கள். கத்திச் சண்டைபோட்டார்கள். அவர்களை எங்கள் கப்பலில் ஏற்றுவதில்லை என்று முடிவுக்குவந்தோம். ஒவ்வொருவரும் கையில் அகப்பட்ட கொட்டன்களுடன் நின்று கொண்டிருந்தோம். கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. எங்களைப்போல அகதியாக ஆசைப்பட்டு வந்தவர்களைப்பற்றி யோசிக்கும் நிலையில் நாங்கள் இல்லை. அவர்கள் வெருண்டுபோயிருந்தார்கள்.

ரோலர் இன்னும் கிட்ட வந்தது.
ஆனால் ஒரு எல்லைக்கு அப்பால வரவில்லை. அவர்கள் பயம் கொண்டிருக்கலாம்..

நாங்கள் எங்கள் கப்பலிலிருந்து நாலுபேரை அனுப்பினோம். அவர்கள் நீந்தி ரோலரை அடைந்து பின்திரும்பி வந்தார்கள்.

அவர்கள் சொன்ன கதைககளைக்கேட்க எங்கள் மனங்கள் தழும்பின. கண்கள் சுரந்தன. அவர்கள் நாட்டைவிட்டு வெளிக்கிட்டு எழுபத்தைந்து நாட்கள் ஆகிஇருந்தது. அவர்கள் நாற்பது நாட்களுக்குரிய உணவையே அவர்களின் ஏஜென்சி கொண்டுவந்திருந்தான். மீதிநாட்கள் சாப்பாடு இல்லாது சோர்ந்து விழுந்துகொண்டிருந்தார்கள்.

நாங்கள் அவர்களை வரவேற்று எங்கள் கப்பலுக்குள் அனுமதித்தோம். எல்லோருமாக நாங்கள் இப்போது முந்நூறு ஆகியிருந்தோம். இடம்போதாது. படுப்பதற்கு சிரமப்பட்டோம். வந்ததில் இருவர்மட்டும் தமிழர். மற்றவர்கள் சிங்கள இளைஞர்கள்.

மூன்றாவது கிழமையும் முடிந்தது. ஏஜென்சி திரும்ப வாக்களித்தபடி இன்னும் ஒருகிழமையில் கப்பல் புறப்பட இருந்து..
ஆனால் புறப்படவில்லை. அவர்கள் தங்களுக்குள் கூடிக்கதைத்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். கப்பல் உடனடியாக பெயின்ற் மாற்றவேணும் என்றார்கள். நாங்கள் எல்லோருமாக சேர்ந்து பெயினற் அடித்தோம். ஐந்து நாட்கள் பிடித்தது. முதலில் நீலமாக இருந்த கப்பல் இப்போது கறுப்பும் வெள்ளையுமாக கலர் மாறியது. பெயின்ற் மாற்றியதற்கான காரணத்தை அறிந்தபோது திகைத்தோம். அது ஒரு கள்ளக்கப்பல். பாகிஸ்தான் நாட்டைச்சேர்ந்தது. அந்தக்கப்பலில் வேலை செய்த இரண்டு சிங்களவர் வலு நாசூக்காக கடத்தி சோமாலியாவுக்கு கொணர்ந்து விட்டார்கள். எமது கப்பல் கள்ளக்கப்பல் என்பதால் அது எகிப்து போடரைத் தாண்டமுடியாது என்பதே உண்மை. இப்போ கலர் மாற்றியபடியால் போடர் தாண்டக்கூடிய சூழ்நிலை இருந்தது.

மூன்றாவது கிழமையும் முடிந்தது. எங்களை நோக்கி இரண்டு விசைப்படகுகள் வேகமாக வந்துகொண்டிருந்தன. அது பொலிஸாக இருக்கலாம் என்று பயந்தோம். நாங்கள் பயந்தது சரியாகவே போய்விட்டது. எங்களை உள்ளோ போய் ஒழியச்சொன்னார்கள். விசைப்படகில் வந்தவர்கள் இப்போது எங்கள் கப்பலின் மேற்தளத்தில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களில் இருவர் வெள்ளைக்காரர்கள்.

வந்தவர்கள் கப்பலை பரிசோதித்தார்கள். இஞ்சின் நல்லநிலையில் இருந்தது. கப்பலின் மற்றபகுதிகளையும் சோதனையிடவேண்டும் என்றார்கள். நாங்கள் இருந்த தளம் மூடி இருந்தது. எங்கள் கப்டன் ஏதோ சாக்குப்போக்குச்சொல்லி சமாளித்துக்கொண்டிருந்தான். எங்களுக்கு திக்திக் என்றுகொண்டிருந்தது. அந்தநேரம் பார்த்து எங்கள் பகுதிக்குள் இருந்து ஆடு ஒன்று வெருண்டோடியது. அந்த வெள்ளைக்காரன் என்ன அது என்று அதட்டினான்..

தொடரும்....

# விக்கல்

முன்னும் பின்னும் தேடினேன்.
தெரிந்த முகமென எதுவுமில்லை
மொழி தெரியாத நாட்டில்
நான் ஊமையாக.

நீள் வரிசையில் ஏராளம் மக்கள்
விசா புதுப்பிக்க விடியவே வந்தேன்.
ஏதும் கேள்வி கேட்டால்,
பதில் சொல்லத் தெரியாது.
பேச்சுத் துணைக்கும் ஆளில்லை.

ஸ்ரீ லங்கா என்றொரு குரல்,
கேட்கிறது.
அங்கே ஒரு பெண்
என் நாடு போலவே தோற்றம்,
ஆசையுடன், ஆவலுடன்
*அக்கா தமிழா?* என்றேன்.
பதிலில்லை.
ஸ்ரீ லங்கா?
தலையாடியது.
பேச்சுத் துணைக்கு
ஆள் கிடைத்த மகிழ்வு.
என் பெயர் சொன்னேன்.
பதிலுக்கு
my name is Malgandi Uiangoda'
இருவருக்கும் பேச ஆசை.
முடியவில்லை.
சில வார்த்தைகள் மட்டும்
எமக்குள் பொது மொழியாகின
மிகுதியெல்லாம்
விக்கல் போல விக்கி விக்கி
தொண்டைக்குள் நின்றன.

**- தர்மினி**

ஆர்மோனிய இசையில் நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் விரலசைவில் லயித்து தனது ஆர்மோனியக்கலையை வளர்த்தெடுத்ததாக திரு. றொபேட் அவர்கள் தெரிவிக்கிறார்.

பாரிஸில் ஆரம்பகாலங்களில் கலைபண்பாட்டுக்கழகத்தில் திரு. பரா அவர்களுடன் இணைந்து ஔவையார் போன்ற பாராட்டுப்பெற்ற நாடகங்களை மேடையேற்றியிருக்கிறார்.

பின்நாளில் திருமறைக்கலாமன்றத்துடன் இணைந்து பாரிஸில் தமிழர் பாரம்பரியக்லையான கூத்து, இசைநாடகங்களுக்கு உயிரூட்டியிருக்கிறார். திருமறைக்கலாமன்றம் அரியபல முயற்சிகளை மேற்கொள்வதற்கு கலைஞர் றொபேட் அவர்களின் நம்பிக்கையூட்டலும், பக்கபலமுமே முக்கிய காரணம். நீ ஒரு பாறை, அனைத்தும் அவரே, ஏகலைவன், ஞானசௌந்தரி, ஏரோதன் ..... போன்றவை கலைஞர் றொபேட அவர்களின் பங்களிப்போடு பாரிஸ் திருமறைக்கலாமன்றம் அளித்த முக்கிய அளிக்கைகளாகும்.
றொபோட் அண்ணனின் இழப்பு திருமறைக்கலாமன்றத்திற்கு ஈடுசெய்யமுடியாத இழப்பு.
யார் யாருக்கு ஆறுதல் கூறுவது?
குடும்பத்தினர், மற்றும் கலை உறவுகளுடன் மன்றமும் இணைந்து கொள்கிறது.

## அஞ்சலி

இழப்புக்களை நாங்கள்
ஏற்றுத்தான் ஆகவேண்டுமென
நிர்ப்பந்திக்கப்டுகிறோம்.

ஒரு உண்மைக்கலைஞனின்
இழப்பிது.
தாங்கமுடியாத துயரைத்தருகிறது

எத்தனை மெட்டுகள்...
எத்தனை பாட்டுகள்...
தேங்கிக்கிடந்த பொக்கிசம்!
அத்தனையும் போயின.

அந்த ஆழ்கடல் முத்துக்களை
தோண்டி எடுக்க - இனி
யாரிடம் போவோம்?

எத்தனை ஞாயிறுகள்...
உனது விரலசைவில்
துள்ளியெழும் கூத்திசையை ரசிக்க
ஓடோடி வந்து
உனதருகில் இருந்திருப்பேன்.

நான் உன் ரசிகனாகி - நீ
என் ரசிகனாகி
மாறி மாறி ரசித்தோம்.



கலைஞனே!
சொல்லத்தெரியாத வேதனை
நெஞ்சுக்குழிக்குள் முட்டி
விம்முகிறது.

உனக்காய்
என் இதயம் வதைபட
கண்கள் கசிகின்றன.

- மனோ -